செய்தி வெளியீட்டு எண்.811 நாள்:**22.9.2010**

**<u>மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் படித்த வேலைவாய்ப்பற்ற ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளித்து தனியார் நிறுவனங்களில் பணியமர்த்துதல் பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.</u>**

தமிழ்நாட்டில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் எய்தும் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்படுவார்கள் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.8.2010 அன்று சுதந்திர தின சிறப்புரையில் அறிவித்ததைத் தொடர்ந்து, 2010–11ஆம் நிதியாண்டில் ஒரு லட்சம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் எய்தும் பயிற்சி அளிக்கப்பட்டு தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக முதற்கட்டமாக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுகுறித்து முக்கிய முடிவுகள் எடுப்பதற்காக மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாநில திறன் மேம்பாட்டு குழுமத்தின் இரண்டாவது கூட்டம் இன்று (22.09.2010) காலை 10.30 மணியளவில் புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ் 10ஆம் வகுப்பு, +2 தேர்ச்சி பெற்ற இளைஞர்களை தேர்வு செய்து உடனடியாக தேவைப்படும் பணியிடங்களுக்கு ஏற்றவாறு, தனியார் நிறுவனங்களில் பணிக்கேற்ற திறன் எய்தும் பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தப் படுவார்கள். ஐ.டி.ஐ., பொறியியல் பட்டயம், பட்டதாரிகள், பொறியியல் பட்டம் மற்றும் மேல்படிப்புகள் படித்தவர்களுக்கு, உடனடி வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு, தனியார் நிறுவனங்களின் தேவைக்கேற்ப உயர் திறன் கொண்ட சிறப்பு பயிற்சிகள் அளித்து, பணியில் அமர்த்தப்படுவர். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசு வெளியிட்டுள்ளது. அதற்காக, தானியங்கி, தானியங்கி பாகங்கள் மற்றும் இயந்திரங்கள்/கருவிகள், துணிநூல் மற்றும் ஆடை, கட்டிடம் மற்றும் கட்டுமான தொழில், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் தொலைதொடர்பு உட்பட 15 தொழிற்பிரிவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இதன்படி, ஒவ்வொரு தொழிற்பிரிவுக்கும் ஒரு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருப்பார். அந்தந்த துறையைச் சேர்ந்த செயலாளர்கள் அமைப்பாளராக இருப்பார்கள். இத்திட்டம் மாநில இயக்கத் திட்டமாக செயல்படுத்தப்படும். அதற்காக ஒரு சங்கம் (சொசைட்டி) உருவாக்கப்படும். இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவர் இயக்குநராக நியமிக்கப்படுவார்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படும் மாநிலத் திறன் மேம்பாட்டுக் குழுமம் இத்திட்டத்தின் செயல்பாட்டினை கண்காணிக்கும்.

இன்று நடைபெற்ற கூட்டத்தில், இத்திட்டத்தினை செயல்படுத்தும் முன்னோடி தனியார் நிறுவனங்களைக் கண்டறிதல், வேலைவாய்ப்பு வழங்கும் தனியார் நிறுவனங்களைக் கண்டறிந்து முடிவு செய்தல், வேலைவாய்ப்பிற்கான தொழிற்திறன் பயிற்சி அளிக்கக்கூடிய தொழில் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் குறித்து முடிவு செய்தல், தொழிற்பிரிவு வாரி பணிக்குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்வு செய்தல், இக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் முன்னோடி நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தலைவர்களாக நியமித்தல், மாவட்ட அளவில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், இத்திட்டத்தினை முதற்கட்டமாக தொடங்கி வைத்தல் ஆகியவை குறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் விவாதித்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, ஒரு லட்சம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை மாவட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் தனியார் நிறுவனங்கள் தேர்வு செய்து, உடனடியாக தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான பணியிடங்களை நிரப்பிடும் வகையில் திறன் எய்தும் பயிற்சி அந்தந்த நிறுவனங்களிலேயே அளித்திடவும், வேலைவாய்ப்பினை வழங்கவும் முடிவு செய்யப்பட்டது.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையில் தனியார் நிறுவனங்களோடு, அரசு கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் இணைந்து செயல்படவும் இக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, நிதித்துறைச் செயலாளர் திரு. க. சண்முகம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.டி. பிரபாகர் ராவ், இந்திய தொழிற்சாலைகள் கூட்டமைப்பு நிர்வாகிகள், தனியார் தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.